Bundesamt
für Migration
und Flüchtlinge

# ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்தில் பங்கேற்கும் பெண்கள் மற்றும் ஆண்களின் தரவுகளைப் பாதுகாக்கும்-சட்டவிதி 13, 14 அடிப்படை ஒழுங்கிற்கமைய (DSGVO) தரவுகளைப் பாவிப்பது குறித்த தகவல் பத்திரம்

ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டம், குடிவரவாளர்கள் மற்றும் அகதிகளுக்கான மத்திய அமைச்சகத்தால் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் நிறைவேற்றப்படுகின்றது, இதற்கு தனியார் மற்றும் அரச பாடநிலையங்கள் பங்கு கொள்கின்றன, சட்டவிதி § 43 பந்தி 3 வரி 2 AufenthG.

இந்த செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக உங்கள் தனிப்பட்ட விபரங்கள் குறித்த தரவுகள் பின்வரும் இடங்களில் பதியப்படுவதுடன் அவை பாவிக்கப்படுகின்றன:

- மத்திய அமைச்சகம் உங்கள் தனிப்பட்ட விபரங்கள் குறித்த தரவுகளை, பின்வரும் நோக்கங்களுக்காகத் தேவைப்படும்போது எடுத்துக்கொள்ளும்:
    - ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டம் ஒன்றில் படிப்பதற்கான அனுமதி வழங்குவதற்கு (சட்டவிதி § 5 பந்தி 1 IntV) மற்றும் ஆகக்கூடியது 300 பாடமணித்தியாலங்கள் மொழிவகுப்பை மீளவும் கற்பதற்கு அனுமதிக்கப்படும் (சட்டவிதி § 5 பந்தி 5 IntV)
    - ஒருங்கிணைப்பு படிப்பு பாடத்திட்டத்திற்காக கட்டணத்தை செலுத்துவதிலிருந்து விடுவித்தல் (சட்டவிதி § 9 பந்தி 2 IntV)
    - பிரயாணச்செலவிற்கு ஒரு உதவித்தொகையை வழங்குதல் (சட்டவிதி § 4a பந்தி 1 IntV)
    - ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்திற்கான கட்டணத்தில் 50% ஐ திரும்ப பெறுதல் (சட்டவிதி § 9 பந்தி 6 IntV)
- வெளிநாட்டவர் திணைக்களம், தொழில் தேடுவேருக்கான அடிப்படை உதவி வழங்குவோர், அகதிகளுக்கான சட்டத்தின்படி அவர்களுக்கான உதவி வழங்குவோர் அல்லது மத்திய அரச நிர்வாகத் திணைக்களம் பாடத்திட்டத்தில் பங்கேற்குமாறு உங்களுக்கு ஒரு அனுமதியை அல்லது கட்டாய கடமையை வழங்கினால், இந்த இடங்களுக்கு மத்திய அமைச்சகம் உங்கள் தனிப்பட்ட விபரங்கள் குறித்த தரவுகளை, விசேடமாக படிப்பதற்கான அனுமதியை உறுதிப்படுத்துவதற்கான தரவுகள் மற்றும் சோதனை- மற்றும் பதிவு நிலையத்திற்கு அனுப்புவதற்கான தரவுகள் தேவைப்படின் அவைகளுக்கு வழங்கப்படும். தரவுகள் மத்திய அமைச்சகத்துக்கு, விசேடமாக ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்திற்கான கட்டணத்தைத் தீர்மானிக்க மற்றும் அதை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்படும். (சட்டவிதி § 88a பந்தி 1 வரி 1 AufenthG).
- மத்திய அமைச்சகம் உங்களை சட்டவிதி § 7 பந்தி 3 அல்லது 5 IntV யின் பிரகாரம் விரைவாக ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டம் நடத்துவோரிடம், ஒரு பாடத்திட்டத்தில் பங்கேற்கும் நோக்கத்திற்காக அனுப்பினால் அல்லது கேட்டுக்கொண்டால், மத்திய அமைச்சகம் இது குறித்து பாடத்திட்டத்தை நடத்துவோருக்கும் அதேபோன்று உங்களை பாடத்திட்டத்திற்கு செல்லுமாறு கடமைப்படுத்திய நிலையத்திற்கும் (இது உங்கள் விடயத்தில் தேவைப்படின்) அறிவித்துக்கொள்ளும்.
- பாடத்திட்டத்தை நடத்துவோர் மத்திய அமைச்சகத்திற்கு ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டம் உங்களது பதிவுத் தரவுகளை அறிவிப்பார்கள், அதாவது இது

KNr. 630.154b Tamil BAMF 04/2024

ஒழுங்கான முறையில் பாடத்திட்டத்தில் பங்கேற்பதை உறுதிசெய்வதற்காக, ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்தில் பங்கேற்று சித்தியடைந்தது அல்லது சித்தியடையாததற்காக சான்றிதழ் வழங்க அல்லது ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்திற்கான கட்டணத்தைத் தீர்மானிக்க மற்றும் அதை நடைமுறைப்படுத்துவதற்காக தேவைப்பட்டால் அறிவிப்பார்கள். (சட்டவிதி § 88a பந்தி 1 வரி 1 AufenthG).

- தற்சமயம் நீங்கள் ஒரு ஒருங்கிணைப்பு படிப்புப் பாடத்திட்டத்தோடு சேர்ந்த பிள்ளைப் பராமரிப்பை சட்டவிதி § 4 a பந்தி 2 IntV யின் பிரகாரம் மேற்கொள்ள விரும்பினால், அப் பராமரிப்பு நிலையம், பராமரிக்கப்படும் பிள்ளையின் குடும்பப் பெயர், முதற்பெயர் மற்றும் பிறந்த திகதி போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளும். இவ் விபரங்களை அனுமதி வழங்குதல் மற்றும் பாடத்திட்டத்தை நடத்துவோர் தமது கட்டணத்தைப் பெறும் தேவைக்காக BAMF க்கு அறிவித்துக்கொள்வர்.

- நீங்கள் ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்தில் பங்கேற்பதற்கு கடமைப்படுத்தப் பட்டிருந்தால், பாடத்திட்டத்தை நடத்துவோர், நீங்கள் ஒழுங்காக ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்திற்கு சமூகமளிக்கின்றீர்களா இல்லையா என்பதை கடமைப்படுத்திய நிலையத்திற்கு அறிவிப்பார்கள் (சட்டவிதி § 88a பந்தி 1 வரி 2 AufenthG).
- மத்திய அமைச்சகம் உங்களது விபரங்கள் குறித்த தரவுகளை தொழில் தேடுவோருக்கு அடிப்படை உதவிகளை வழங்குவதற்குப் பொறுப்பானவர்கள் அல்லது அகதிகளுக்கு உதவி வழங்குவதற்கான சட்டத்தின்படி அதற்குப் பொறுப்பான நிலையம், அதேபோன்று விசேடமாக ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்தில் பங்கேற்க ஒரு அனுமதி, உரிமைபெறல் அல்லது கடமையாகுதல், மற்றும் பங்கேற்கும் கடமையை பரிசோதித்தல் அத்துடன் வதிவிட அனுமதியை நீடிப்பதற்குத் தேவைப்பட்டால் அறிவித்துக்கொள்ளும், (சட்டவிதி § 88a பந்தி 1 வரி 3 AufenthG).

மத்திய அமைச்சகம், சொந்தமாகப் பெற்றுக்கொண்ட அல்லது வேறு நிலையங்களில் இருந்து பெறப்பட்ட உங்களது விபரங்கள் குறித்த தரவுகளின் இரகசியம் மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பு வகிக்கும்.

மத்திய அமைச்சகத்தின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

Bundesamt für Migration und Flüchtlinge

Frankenstraße 210

90461 Nürnberg

தரவுகள் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சகத்தின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

Bundesamt für Migration und Flüchtlinge

- Behördlicher Datenschutzbeauftragter -

Frankenstraße 210

90461 Nürnberg

உங்கள் குடும்பப் பெயர், முதற்பெயர் மற்றும் பிறந்த திகதி விபரங்கள் ஆகக்கூடியது பத்து வருடங்களிலும், உங்களது ஏனைய தனிப்பட்ட விபரங்கள் குறித்த தரவுகள் ஆகக்கூடியது

ஒருங்கிணைப்பு படிப்புப்பாடத்திட்டத்தை முடித்த பின்பான ஐந்து வருடங்களின்பின் அழிக்கப்படும் (சட்டவிதி § 8 பந்தி 6 IntV).

உங்களது தனிப்பட்ட விபரங்கள் குறித்த தரவுகளை அறிவிப்பதால் உங்கள் பாதுகாப்பிற்கு அல்லது வேறு நபர்களின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படலாம் என நம்புவீர்களாயின் அதை உறுதிப்படுத்தி, பாதுகாப்புக் காரணமாக அதைக் கட்டுப்படுத்துமாறு மத்திய அமைச்சகத்திற்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்வதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. இதன்போது பொதுமக்கள் நன்மை கருதி இருந்தால் மட்டுமே, இதை அறிவித்துக்கொள்ள முடியும். இதைவிடவும் இந்தத் தரவுகள் அனுமதியற்ற விதத்தில் செயற்படுத்தப்பட்டால், உங்கள் தனிப்பட்ட விபரங்கள் குறித்த தரவுகள் அறிவிக்கப்படுவதை நிறுத்துவது மற்றும் அவற்றை அழித்து விடுவது குறித்து நடவடிக்கை எடுக்க உங்களுக்கு உரிமையுள்ளது.

இதுகுறித்து தரவுகளைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பான திணைக்களத்தில் ஆட்சேபனை தெரிவிப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது:

Bundesbeauftragte für den Datenschutz und die Informationsfreiheit

Graurheindorfer Straße 153

53117 Bonn